# தூதன்

தூதன்-26 நவம்பர் 2017 தூது-10

உன் நிலத்தில் முதல் விளைச்சல்களில் முதற் கனியை உன் தேவனாகிய கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டு வருவாயாக. யாத்திராகமம் 23:19

## பொருளாதார ஆசீர்வாதம்
## மிடுக்கான வாழ்விற்கு அல்ல, கொடுக்கும் வாழ்விற்கே!



Private Circulation only

தென்னிந்தியத் திருச்சபை தமிழ் சபை - துபாய்

# தென் இந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்


| | |
|---|---|
| சபை போதகர் மடல் | 02 |
| ஆயரம்மா மடல் | 05 |
| ஆராதனை பாடல்கள் | 07 |
| உதவி போதகர் மடல் | 08 |
| உதவி ஆயரம்மா மடல் | 11 |
| செயலர் மடல் | 13 |
| நிறைவேறிய தீர்க்கதரிசனம் | 15 |
| தெரிந்த சத்தியம் தெரியாத உண்மை | 18 |
| திருச்சபை ஜெபநாள் | 20 |
| ஒட்டகம் | 22 |
| வேதவினா போட்டி | 24 |
| தெரிந்து கொள்வோம் | 26 |
| Health Tips | 28 |
| Children's Corner | 30 |
| Birthday Celebrants | 33 |
| Wedding Anniversary Celebrants | 36 |
| Who is Ezra | 39 |



P.O.Box: 8785, Dubai. Ph: 04-2552065, 04-2249249(office), Mob: 050-5533645
Website: www. csitamilparishdubai.com, E-mail: tamilcsi@eim.ae

## பண்டிகையும் பாரம்பரியமும்
## Festival & Tradition

அதற்கு மோசேயும் ஆரோனும் பார்வோனை நோக்கி, “எங்கள் இளைஞரோடும், முதியோரோடும், எங்கள் குமாரரோடும், குமாரத்திகளோடும், எங்கள் ஆடுகளையும், மாடுகளையும் கூட்டிக் கொண்டுபோவோம். .... நாங்கள் எங்கள் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாட வேண்டும்” என்றார்கள். (யாத்திராகமம் / Exodus 5:1, 10:9).

கிறிஸ்துவுக்குள் பிரியமான உடன் விசுவாசிகளே,

அன்றன்றுள்ள அப்பத்தையும், அதை உழைத்துப் பெறும் பலனையும், அப்பலனை அனுபவிக்கும் ஆசியையும் வழங்கும் ஆண்டவரின் திருப்பெயரில் புதிய மாத மற்றும் அறுப்பின் பண்டிகை நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். திருச்சபை ஒரு கொண்டாடும் சமுதாயம். எல்லாப் பண்டிகைகளின் அடிப்படை நாயகர் கடவுளே. கொண்டாட வைப்பவரும் அவரே; கொண்டாட்டத்தின் உண்மையை அங்கீகரித்து மகிழ்பவரும் அவரே. ஆகவே கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடும் இம்மாதத்தில் அறுப்பின் தோத்திரப் பண்டிகையின் விவிலியப் பாரம்பரியத்தைப் பற்றிய சில தகவல்களைப் பகிர்ந்துகொள்ள ஆசிக்கிறேன். இடம், அமைப்பு, நிலம் மாறினாலும் கொண்டாட்டத்தின் தலைவர் ஆண்டவரே. (Though there are changes of place, season, structure in festivals, the leader or focus is God and only God).

**அறுப்பின் பண்டிகையின் விவிலியப் பாரம்பரியம் (Bibilical tradition of the Harvest Festival):** கர்த்தருக்குப் பண்டிகையைக் கொண்டாடவேண்டும் என்று மோசேயும், ஆரோனும் பார்வோனிடம் போராடி, தெய்வீக வழிநடத்துதலால் மக்களை அடிமைத்தனத்தினின்று விடுவித்து, பாலும் தேனும் ஓடும் கானான் நாட்டிற்குக் கொண்டுசெல்லும் புனிதப் பயணப்பாதையில், சீனாய் மலையில், ஆண்டவரே மோசேயிடம் பண்டிகைகளைக் கொண்டாட வரைமுறைகளை வழங்குகிறார். குறிப்பாக யாத்தி. 23:16-ன்படி “நீ வயலில் விதைத்த உன் பயிர் வேலைகளின் முதற்பலனைச் செலுத்துகிற அறுப்புக்கால பண்டிகையையும், வருட முடிவிலே நீ வயலில் உன் வேலைகளின் பலனைச் சேர்த்துத் தீர்த்தபோது சேர்ப்புக்கால பண்டிகையையும் ஆசரிப்பாயாக”. அதன்படி வசந்தகாலப் பண்டிகைகள் (spring festivals) நான்கில் இவ்விரண்டும் விவசாயத்துடனும் அறுவடையுடனும் தொடர்புடையவை (தூதன் நவம்பர் 2015).

### 1. அறுப்புக்கால பண்டிகை (Harvest Festival):

எபிரேயத்தில் ஹபிக்கூம் (Habikkum) அல்லது பிக்கூரிம் (Bikkurim) என்றழைக்கப்படும் முதற்கனி அல்லது முதற்பலன் பண்டிகை (Festival of the first fruits) முதல் அறுப்பின் முதற்பலனைச் சமயக் காணிக்கையாகப் (religious offering) படைக்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் கொண்டாடப்பட்டது. இது ஆண்டவரது ஆலயத் திருப்பணிகள், ஆசாரியர்கள் மற்றும் ஆலயத் திருப்பணியாளர்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது. பெரும்பாலும் முதற்கனிகள் அல்லது முதற்பலன்களாகக் கோதுமை, பார்லி, திராட்சை (ரசம்), அத்தி(அடை), மாதுளை, ஒலிவம் (எண்ணெய்), பேரிச்சை போன்ற பயிர்கள் மற்றும் பழங்கள் காணிக்கைகளாகப் படைக்கப்பட்டன. உபாகமம் 26-ம் அதிகாரத்தின் அடிப்படையில் முதல் விளைச்சலின் முதற்பலனை முதலாவது கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுசெல்லவேண்டும் (26:2); ஆசாரியனிடத்தில் அக்காணிக்கையைப் படைக்க வழங்க வேண்டும் (26:3,4); ஒன்றுமில்லா நிலையிலிருந்து இன்றுவரை வழிநடத்தி உயர்த்தின கடவுளுக்கு முன் தாழ்த்தவேண்டும் (26:5-9); காணிக்கையைப் படைத்து பணிவுடன் மகிழவேண்டும் (26:10-11). கர்த்தருக்குப் படைத்த தசமபாகம் மாத்திரமல்ல, மற்றொரு தசமபாகத்தை லேவியர், அந்நியர், பரதேசி, திக்கற்ற பிள்ளைகள் மற்றும் விதவைகளுடன் பகிர்ந்துகொண்டு, இம்மட்டும் உண்மையாய், உத்தமமாய்க் கர்த்தருடைய உடன்படிக்கைகளைக், கட்டளைகளைக் கைக்கொள்வதாக வாக்களித்து, அவரிடம் தங்களைத் தொடர்ந்து ஆசீர்வதிக்கவும், அதிலே தொடர்ந்து நிலைத்திருக்கவும் வேண்டிக்கொள்ளவேண்டும் (26:12-19).

### 2. வாரங்களின் பண்டிகை (Festival of weeks):

எபிரேயத்தில் ஷாவூத் (Shavout) அதாவது ஏழு வாரங்களுக்குப் பின்வரும் 50-வது நாளின் பண்டிகை என்றழைக்கப்படும் இப்பண்டிகை கிரேக்கத்தில் பெந்தேகொஸ்தே என்றும் அழைக்கப்படும். எபிரேயர்களின் மூன்று அடிப்படைப் பண்டிகைகளில் பாஸ்காவுக்கும், கூடாரப் பண்டிகைக்கும் இடைப்பட்ட காலத்தில் கொண்டாடப்படுவதே இப்பண்டிகையாகும் (யாத்.23:14-17, 34:18-24, உபா. 16:16, 2 நாளா. 8:13). இது கோதுமை அறுப்பின் முதற்பலிகளைச் செலுத்தும் பண்டிகையாகக் குறிப்பிடப்படுகிறது (யாத்.34:22). முதலாவது கிடைக்கும் பெரிய பயிர் விளைச்சலின் முதற்பலனைச் சமூகமாகச் செலுத்தி கர்த்தருக்கு முன் நன்றிக் கடனைத் தாழ்மையுடன் படைக்கும் நன்றிப்பண்டிகையாகும். லேவி. 23:15-22 வரையுள்ள பகுதியில் இப்பண்டிகை விரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. கர்த்தருக்குப் போஜன பலியென்னும் முதற்பலனை மெல்லிய மாவின் இரண்டு அப்பப்படையல் அசைவாட்டுக் காணிக்கையாக்கி, பழுதற்ற ஆட்டுக்குட்டியின் தகன பலியுடன் செலுத்தவேண்டும். அவைகள் ஆசாரியனின் பங்காகவேண்டும். அந்நாளை பரிசுத்தமாக்க வேண்டும். முதல் வெள்ளாண்மையை முதன்முதலில் அறுக்கையில் ஓரத்தில் விழுகிறதையும், சிதறுகிறதையும் எளியவருக்கு விட்டுவிட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டனர்.

உபாகமம் 16:9-12 வரையுள்ள விளக்கத்தில் முதல் அறுப்பை அறுக்கத் தொடங்கும் காலமுதல் ஏழு வாரங்களை எண்ணவும், மனப்பூர்வமாக காணிக்கைகளைப் படைத்து, வீட்டிலுள்ள குடும்பத்தார், பணியாளர் அனைவரும் சந்தோஷப்பட்டு, பழைய வாழ்வை நினைத்து நன்றிப் பொருத்தனை நிறைவேற்றவும் வேண்டும் என்றும், 50-ம் நாளில் ஒருவரும் வேலை செய்யாமல் ஓய்ந்திருக்கவேண்டும் என்றும் (எண். 28:26-31) கட்டளையிடப்பட்டது. பெந்தேகொஸ்தே பண்டிகை முதலாம் நூற்றாண்டுத் திருச்சபையிலும் பக்தியுடன் கொண்டாடப்பட்டது (அப்.2:1, 1 கொரி.16:8).

### 3. சேர்ப்புக்கால பண்டிகை (Festival of Ingathering):

யாத்திராகமம் 23:16-ன்படி வருஷ முடிவில் கொண்டாடப்படும் சேர்ப்புக்கால பண்டிகை திஷ்தி என்னப்படும் எபிரேயரின் 8-ம் மாதத்தின் 15 முதல் 22 நாள் வரை 8 நாட்களாக (ஓய்வுநாளில் துவங்கி ஓய்வுநாளில் முடிவடையும்) செப்டம்பர் மாதத்தின் மையத்திலிருந்து அக்டோபர் இறுதிவரை என்று ஆங்கில நாட்காட்டியில் கணக்கிடப்படுகிறது. பெரும்பாலான திருச்சபைகளில் இந்த நாட்களிலேதான் அறுப்பின் பண்டிகையைக் கொண்டாடும் பாரம்பரியம் உண்டு. இது கூடாரப் பண்டிகை (Festival of Booths) என்றழைக்கப்படும் சுக்கோத் (Sukkot/succot) பண்டிகையாகவும் நினைவு கூறப்படுகிறது. அவ்வாண்டின் கடைசி அறுவடையும், கதிர் சேகரிப்பும் நிறைவுற்றபோது கொண்டாடப்பட்டது (யாத்.23:16, 34:22, லேவி.23:33-36, எண்.29:12-40, உபா.16:13-18, எசே.45:25). சுக்கோத் என்னும் இக்கூடாரப்பண்டிகை அல்லது 50-ம் நாள் பண்டிகையானது விவசாயத்தையும், வருட முடிவு அறுவடையையும் அடிப்படையாகக் கொண்டது (யாத்.34:22). எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினபோது கூடாரங்களில் குடியிருக்கப் பண்ணினதையும், கானான் தேசம் சென்ற பின்பும் கடைப்பிடிக்கும்படியும் கட்டளையிடப்பட்டது (லேவி.23:42-43). அந்நாளில் யாரும் (மனிதர், மிருகம் உட்பட) எந்தவொரு வேலையும் செய்யலாகாது. ஆகவேதான் இது ஓய்வுநாளில் ஆரம்பித்து ஓய்வுநாளில் முடிவடையும். கர்த்தருக்கு நம்முடைய ஒப்படைப்பையும், நன்றியையும், ஐக்கியத்தையும், முதல் காணிக்கைகளையும் படைக்கும் அடிப்படையில்தான் அறுவடையின் இம்மூன்று பண்டிகைகளும் கொண்டாடப்பட்டன. அவை மூன்றையும் ஒருங்கிணைத்து நாமும் வருட முடிவிலே, முதற்கனிகளைப் படைத்து, ஓய்வுநாளிலே இதைக் கொண்டாடுவோம்; நம் முந்தைய வாழ்க்கையை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்; ஊருக்கு வெளியே அல்லது ஆடம்பரமான வாழ்வு அமைப்பை விட்டு வெளியே வந்து கூடாரம் அமைக்க இயலாவிட்டாலும் பாளையத்திற்குப் புறம்பே சிலுவையில் நமக்காக அறையுண்ட ஆண்டவர் இயேசுவின் மீட்பை உணர்ந்து நம் சுயத்தை மறந்து இறைமேன்மை போற்றுவோம்; இந்த நல்ல வேலைக்கு நம் கைகளை இணைப்போம்; இறைவனை இறைஞ்சுவோம். ஆமென்.

இறைப்பணியில் ஆயர்,
அருள்திரு. சே.கிறிஸ்தோபர் ரத்தினசாமி,
சபை போதகர்.

## ரூத் - புதுவாழ்வின் அறுவடை
## (Ruth - Harvest of New Life)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

புதுவாழ்விற்கு நேராக அனுதினமும் நம்மை வழிநடத்துகிற நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே புதிய மாத நல்வாழ்த்துக்களையும், தோத்திரப் பண்டிகையின் வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். திருமறை ஒரு விசுவாச வரலாற்றுப் புத்தகம் மாத்திரம் அல்ல, விவசாய வரலாற்றுப் புத்தகம். இஸ்ரவேலரின் பலிகள், காணிக்கைகள், காலங்கள் மற்றும் பண்டிகைகள் ஆகிய அனைத்தும் விசுவாசத்தையும், விவசாயத்தையும் இணைத்துப் பார்க்கும் வாழ்வாகவே இருக்கிறது. அந்த அடிப்படையில் அறுவடைப் பண்டிகையை நன்றியோடு நினைவுகூர்ந்து கொண்டாடும் இம்மாதத்தில் அறுப்போடு தொடர்புடைய ரூத் என்னும் பெண்ணின் புதுவாழ்வினை அவர்தம் வாழ்க்கைச் சரித்திரத்திலே புரிந்துகொள்வோம்.

**அதிகாரம் 1: தரிசு நிலமும் - வாழ்வும் (Barren Land and Life):** சொந்த நாட்டில் பஞ்சம் ஏற்படுகிறது (ரூத் 1:1). ஆகவே எலிமெலேக்கின் குடும்பம் விவசாயமும், விளைச்சலுமின்றி தவிக்கும் சூழலால் பஞ்சம் பிழைக்க அருகிலுள்ள மோவாப் தேசத்திற்குக் குடிபெயர்கிறார்கள். ஆனால், அந்தோ பரிதாபம்! நிலத்திலே மாத்திரமல்ல, குடும்பத்திலும் தரிசுநிலை ஏற்படுவதை ரூத்தின் புத்தகம் முதல் அதிகாரம் எடுத்துச் சொல்கிறது. குடும்பத்தின் ஆண்கள் அனைவரும் மரித்துப்போகிறார்கள். ஆண் துணையில்லாத குடும்பமாகவும் ரூத்தினுடைய குடும்பம் அறிமுகப்படுத்தப்படுகிறது. தன்னுடைய தேசத்திலே கர்த்தர் ஆகாரம் தருகிறார் (1:6) என்று நகோமி கேள்விப்பட்டு, தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிப் போகும்போது தம் மருமகள்களை அவர்களுடைய நாட்டிலே திரும்பிப் போகவும், தன்னைப் பின்பற்றி வந்தால் வாழ்வில்லை என்றும் கூறுகிறார். அப்படிப்பட்ட தரிசான நிலைமையிலும் ஓர்பாளைப் போல் அல்லாமல் ரூத் கர்த்தரை நம்பி வாழ்வைத் தொடர்கிறார்.

**அதிகாரம் 2: சேகரிக்கும் கதிரும் - வாழ்வும் (Ingathering of Grains and Life):** ரூத்தின் இரண்டாம் அதிகாரம் அவரது வாழ்க்கையை விவசாயத்துடன் தொடர்ந்து ஒப்பிடுகிறது. எலிமெலேக்கின் உறவினராகிய போவாஸ் என்னும் ஆஸ்திக்காரனுடைய வயல்வெளியில் அரிக் கட்டுகளிலிருந்து சிந்தினதைப் பொறுக்கிக்கொள்ளும் அபலையாக ரூத் சுட்டிக் காட்டப்படுகிறாள் (2:3). கதிர்களைச் சேகரிக்கிறவராக அறிமுகப்

படுத்தப்படுகிற ரூத், போவாஸினிடத்தில் தயை பெற்று இழந்துபோன வாழ்வைத் திரும்பவும் சேகரிக்கிறவளாய் காட்டப்படுகிறார் (2:13-23). கதிர் பொறுக்க வந்தவள் உறவின் முறையாளாக அடையாளம் காணப்பட்டு தயவு பெறுகிற பெண்ணாக மாறுகிறார்.

**அதிகாரம் 3: தூற்றப்படும் கதிரும் - ஏற்றம் பெறும் வாழ்வும் (New Winnoying and New Life):** ரூத்தினுடைய வாழ்க்கை மேலும் ஏற்றம் பெறுவதையும், போவாசுடன் விவாகம் பண்ணும் நிலைமைக்கு அவளை உயர்த்துவதையும் மூன்றாம் அதிகாரத்தில் பார்க்கிறோம் (3:2-9). புதிய வாற்கோதுமையை போவாஸ் தூற்றும்போது தன் புதுவாழ்வுக்கான ஆலோசனையைத் தன் மாமி வழங்கியதற்குக் கீழப்படிந்து ரூத் செயல்படுகிறார். தன்னைவிட ஒரு சுதந்தரவாளி ஒருவன் ரூத்தின்மேல் இருக்கிறான் (3:12) என்று போவாஸ் சொல்லும்போது ரூத் அதற்குக் கீழ்ப்படிந்து காத்திருக்கிறாள்.

**அதிகாரம் 4 : சுதந்திரமும் - சொந்தமும் (My share and My Life):** அறுவடை முடிந்தாயிற்று. ஆனால் இந்த வாற்கோதுமை அறுவடைக்குப்பின் தன் உறவினராகிய ரூத் என்னும் பெண் வயல் நிலத்தின் பங்கை மாத்திரம் அல்ல (4:3) வாழ்க்கையின் பங்கையும் போவாசிடம் கேட்டுக் காத்திருக்கிறதை கடைசி அதிகாரத்தில் பார்க்கிறோம். போவாஸ் குறிப்பிட்ட அந்த முதல் சுதந்தரவாளி போவாசை அழைத்து, தன் சுதந்திரத்தை தன் சுய விருப்பத்தின்படியே போவாஸ் பெற்றுக்கொள்ள வேண்டுகிறார் (4:4-9). அக்கால வழக்கத்தின்படியேயும், மோசேயின் சட்டப்படியேயும் பாதரட்சையை கழற்றிப்போட்ட அந்த சுதந்திரவாளியிடமிருந்து போவாஸ் உரிமையைப் பெற்றுக்கொள்கிறார் (உபா. 25:5-9).

ஆகவே நான்கு அதிகாரங்கள் கொண்ட ரூத்தின் வாழ்விலே விசுவாசமும் விவசாயமும் பின்னிப் பிணைந்துள்ளதையும், அவ்வாழ்வு வளர்ச்சி அடைகிறதையும் காண்கிறோம். கர்த்தர் தரிசான நிலம்போல அல்லது பஞ்சம் நிலம் போல இருந்த ரூத்தின் வாழ்க்கையை திரளான வாற்கோதுமையை அறுவடை செய்யும் செழிப்புள்ள வாழ்க்கையாக மாற்றுகிறார். சபிக்கப்பட்ட வாழ்க்கைபோல இருந்த சூழலை (1:8-14) ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்ட வாழ்க்கைச் சூழலாக மாற்றுகிறார் (4:11-14). ஆகவே அறுவடையின் பலன் ஆண்டவருடைய கிருபை. கர்த்தர் நம் வாழ்விலும் செய்த இரக்கங்களையும், தந்த ஆசீர்வாதங்களையும் நினைவுகூர்ந்து நன்றியுடன் கர்த்தருக்குரிய காணிக்கைகளைச் செலுத்துவோம்! அதில் நம்மையே முதலாவதாகக் கீழ்ப்படிந்து படைப்போம். கர்த்தர் உயர்த்துவார்!

இறைப்பணியில்,
திருமதி. தீபா கிறிஸ்தோபர், ஆயரம்மா,
பெண்கள் ஐக்கிய சங்கத்தலைவி.

# ஆராதனை பாடல்கள் - நவம்பர் 2017

## பாமாலை - கீர்த்தனை

ஆராதனை ஆரம்ப கவி : பாமாலை 14 பூலோகத்தாரே யாவரும்
ஆராதனை இறுதி கவி : கீர்த்தனை 30 அனுக்ரக வார்த்தையோடே

### 03-11-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 9 | எல்லாருக்கும் மா உன்னதர் |
| பாமாலை | 121 | ஒப்பில்லாத திவ்விய அன்பே |
| கீர்த்தனை | 160 | உந்தன் சித்தம் போல என்னை |
| கீர்த்தனை | 164 | தந்தேன் என்னை இயேசுவே |
| கீர்த்தனை | 8 | ஏசுவையே துதி செய் |

### 10-11-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 34 | பிதாவே மாதயாபரா |
| கீர்த்தனை | 103 | எத்தனை திரள் என் பாவம் |
| பாமாலை | 136 | என் ஆவி, ஆன்மா, தேகமும் |
| கீர்த்தனை | 197 | ஆனந்தமே ஜெயா ஜெயா |
| கீர்த்தனை | 200 | மறவாதே மனமே |
| கீர்த்தனை | 201 | வந்தனம் வந்தனமே |

### 17-11-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 42 | மா மாட்சி கர்த்தர் |
| பாமாலை | 4 | ஆத்மமே உம் ஆண்டவரின் |
| பாமாலை | 201 | சத்ய வேதமான விதை காலை மாலை |
| கீர்த்தனை | 172 | சுந்தரப் பரம தேவ மைந்தன் |
| கீர்த்தனை | 173 | தந்தானைத் துதிப்போமே |
| கீர்த்தனை | 174 | தாசரே இத்தரணியை |

### 24-11-2017

| | | |
|---|---|---|
| பாமாலை | 103 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை | 127 | அருள் மாரி எங்குமாக |
| பாமாலை | 86 | பாவிக்காய் மரித்த இயேசு |
| கீர்த்தனை | 75 | சாலேமின் ராசா |
| கீர்த்தனை | 77 | வரவேணும் எனதரசே |
| கீர்த்தனை | 76 | மேகமீதில் இயேசுராஜன் |

## வாக்குத்தத்த செய்தி

### உங்களிடத்தில் வருவேன். யோவான் 14:18(பி)

உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நம்முடனேகூட இருக்கின்ற ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

நம் வாழ்வில் பல்வேறு நெருக்கமான சூழ்நிலைகள் வரும்போது, தனித்துவிடப்பட்டவர்களைப்போல உணருகிறோம். மேலும், தேவன் என்னோடுதான் இருக்கிறாரா? இல்லையா? என்கிற சந்தேகம் மனதில் எழும்பி நம்மை வாட்டி வதைக்கும். "உங்களிடத்தில் வருவேன்" என்பது சீஷர்களுக்கு இயேசுகிறிஸ்து கொடுத்த வாக்குத்தத்தம். அதை இம்மாதத்தில் நமக்கு வாக்குப்பண்ணுகிறார். எந்த சூழ்நிலைகளில் எல்லாம் சீஷர்களிடம் வருகிறார் என்பதை இம்மாதத்தில் தியானிப்போம். அவர் எந்த சூழ்நிலைகளிலெல்லாம் வருவார், எப்படி செயலாற்றுவார் என்பதைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டோமானால், எந்த நிலைமையிலும் மனரம்மியமாய் வாழும் அனுபவத்தைப் பெற்றுக் கொள்வோம்.

**1. தடுக்கிற இடத்தில் இயேசு வருவார் (மத்தேயு 14:22-25):**
இயேசுகிறிஸ்துவும், சீஷர்களும் கெனேசரேத்து நாட்டில் ஊழியம் செய்யும்படி திட்டமிட்டு, முந்தைய நாள் ஆயத்தப்படுகிறார்கள் (மத்தேயு 14:34). இயேசு கிறிஸ்து தனித்து ஜெபித்து, அப்பணிக்கு ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார் (14:23). சீஷர்கள் படகில் ஏறி, தமக்கு முந்தி செல்லும்படி, அவர்களையும் துரிதப்படுத்தி ஆயத்தப்படுத்துகிறார் (14:22). ஜெபித்து ஊழியத்தை நிறைவேற்றும்படி இயேசுகிறிஸ்து ஆயத்தப்பட்ட போதிலும், அவருடைய சித்தத்திற்குத் தங்களை அர்ப்பணித்து, சீஷர்கள் புறப்பட்டபோதிலும் அவர்கள் நினைத்த இலக்கை அடைந்து விடாதபடிக்குத் தடைவருகிறது. எதிர்க்காற்று அவர்களின் பயணத்தைத் தடுக்கிறது (14:24). அப்படி தடுக்கும் சூழ்நிலையில் இயேசு அவர்களிடம் வருகிறார் (14:25). பிள்ளைகளின் மேற்படிப்போ, வேலையோ, திருமண ஏற்பாடோ போன்ற எந்த பிரயாசமானாலும், அது நிறைவேற ஜெபித்து, திட்டமிட்டு ஆயத்தப்படுகிறோம். அப்படி ஆயத்தப்பட்டாலும், அநேக நேரங்களில் நம் பிரயாசமும், எதிர்பார்ப்பும் சித்திக்காதபடிக்குத் தடைகள் வருகிறது.

தடைகளை நினைத்துக் கலங்கவேண்டாம். அச்சூழ்நிலையில் இயேசு நம்மிடம் வருகிறார். எதினிமித்தமென்றால், நம் ஜெபத்தினாலும், அர்ப்பணிப்பாலுமே இயேசு நம்மிடம் வருகிறார். இஸ்ரவேலர்கள், கானான் தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டும் என்பது தேவசித்தமாய் இருந்த போதிலும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைச் சுதந்தரிக்க அவர்களை வழிநடத்த தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மோசேக்கு அழைப்பும், அற்புதங்களைச் செய்கிற வல்லமையும் இருந்த போதிலும், கானானைச் சுதந்தரிக்க முடியாதபடி, செங்கடல் தொடங்கி அநேக தடைகளைச் சத்துரு கொண்டுவருகிறான். இஸ்ரவேலர்கள் தடுத்து நிறுத்தப்படுகிற அத்தனைச் சூழ்நிலைகளிலும் தேவன் அவர்களிடம் வந்தார். தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் வாழ்வில், சத்துரு தேவதிட்டம் நிறைவேறாதபடிக்குத் தடுக்கும் எச்சூழ்நிலையிலும் அவர் வருவார். இரவோ, நடுக்கடலோ, எதிர்க்காற்றோ, அவர் நம்மிடம் நிச்சயமாக வருவார்.

## 2. பயப்படும் இடத்தில் இயேசு பேசுவார் (மத்தேயு 14:26,27)

சீஷர்கள் நினைத்த இலக்கை அடையமுடியாதபடி தடுத்த எதிர்க்காற்று, கடலை கொந்தளிக்கச் செய்து, அவர்களின் ஜீவன் இன்றிரவோடு முடிந்துவிடுமோ என்கிற பயத்தை, அவர்கள் மனதில் ஏற்படுத்தியது. இது ஒருபக்கம் பயமுறுத்த, மறுபக்கம் கடலின்மேல் நடந்து தங்களிடம் வருபவர் இயேசு என சீஷர்கள் அறியாததால், கலக்கமும், திகிலும் அவர்கள் மனதை வாட்டி வதைத்தது. பயத்தின் உச்சக்கட்டத்தில் ஆவேசம் என சீஷர்கள் அலறினார்கள் (26). பயத்துக்கு மேல் பயம், பிரச்சனைக்கு மேல் பிரச்சனையால் கலக்கமடைந்த சூழ்நிலையில், இயேசு அவர்களிடம், “திடன்கொள்ளுங்கள்” என பேசுகிறார். பிரசவிக்கிற ஸ்திரீ, தன் வேதனையின் உச்சக்கட்டத்தில், பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது, பிள்ளையின் அழுகுரலின் சத்தம், அவளின் வேதனையை மறக்கச்செய்து, அவளுக்கு ஆறுதலையும், மகிழ்ச்சியையும் அளிக்குமென்றால் தேவனுடைய சத்தம் தொனிக்கும்போது, நம் இருதயத்தில் ஆறுதலும், மகிழ்ச்சியும் பெருகுவது எத்தனை நிச்சயம்.

யோபுவின் வாழ்விலும், துர்ச்செய்திக்கு மேல் துர்ச்செய்தியை அவன் கேட்டபோதிலும், தன் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் வேதனைப்பட்டுத் தன் உடல் ஆரோக்கியத்தை இழந்தபோதிலும், “என் மீட்பர் உயிரோடிருக்கிறார்” (யோபு 19:25) என்கிற தேவசத்தம் அவன் காதில் தொனித்துக்கொண்டே இருந்ததால், அவன் வாழ்வை அவிசுவாசம் சூழ்ந்து, சோர்ந்து ஒடுங்கிப் போய்விடாதபடி,

அந்த சத்தம் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் அளித்தது. எப்படிப்பட்ட உச்சக்கட்ட பயங்கரங்களால் வாதிக்கப்பட்டாலும், அந்த வேதனையின் உச்சக்கட்டத்தில் பேசும் தேவன் நமக்கு உண்டு. அவரின் சத்தம் நம் வாழ்வில் நம்பிக்கையையும், விசுவாசத்தையும் பெருகச் செய்யும்.

**3. விழுகின்ற இடத்தில் இயேசு தூக்குகிறார்** (மத்தேயு 14:28-36):
இயேசுகிறிஸ்துவின் சத்தத்தினால், சீஷர்களுக்குள் விசுவாசம் வந்தது. அவர்களில், பேதுருவுக்கு, தனக்குள் வந்த விசுவாசத்தினால் இயேசுவை நெருங்க (14:28-31) ஆசை வந்தது. அந்த விருப்பத்தினால், கடலின் மேல் நடந்து, அவரை நோக்கிச் செல்லும்போது, காற்றின் பலத்தைக் கண்டு அவிசுவாசத்தால் அமிழ்ந்து போகையில், அவர் அவனைத் தூக்கினார். கிறிஸ்தவ வாழ்வில் அவிசுவாசம் வருவதைத் தடுக்கமுடியாது. சோர்வு, மன உளைச்சல், நம்பிக்கையின்மை, பக்திவிருத்தி அடைய முடியாத நிலை போன்றவை கீழே விழுந்து கிடக்கும் அனுபவங்கள். தேவனிடம் செல்லவேண்டுமென முயற்சி செய்யும்போது, சத்துரு நம்மைக் கீழே தள்ளிவிட எவ்விதத்திலும் ஆயத்தமாய் இருக்கிறான். கீழே சத்துரு தள்ளினாலும், தேவனை நோக்கிக் கூப்பிடும்போது, அவர் நம்மைத் தூக்கி, நம் விசுவாசத்தை உறுதிப்படுத்த அருகில் இருக்கிறார்.

விசுவாசத்தில் ஏன் உறுதி வேண்டுமென்றால்: விசுவாசம் பலவீனப்படும் போது வேதம் ருசிக்காது, ஜெபம் பண்ணமுடியாது, ஆராதனை இனிக்காது, சத்துருவும் நம்மை மேற்கொண்டுவிடுவான். ஆபிரகாம் நூறுவயதுள்ளவனாய் இருந்தபோதிலும், விசுவாசத்தில் பலவீனமாய் இருக்கவில்லை (ரோமர் 4:19). ஆபிரகாமைப் போல் விசுவாசம் உறுதிப்பட நாடுவோம். விசுவாசத்தில் உறுதிப்பட்ட சீஷர்கள் தேவனுடைய பாதத்தை நெருங்கிச் சேர்ந்தது போல (14:33), அவரை அண்டிக் கொள்ளும் அனுபவத்தை அடைவோம். தேவனுடைய பாதத்தில் நெருங்கினபோது, அவர்கள் கெனேசரேத்து நாடான அவர்களின் இலக்கை அடைந்து, தேவனுடைய கிரியையைக் காணமுடிந்தது (34-36). கர்த்தர் இம்மாதத்தில் நம்மிடம் வந்து, சகல தடைகளையும் நீக்கி, அவர் நமக்காக ஆயத்தம்பண்ணின நன்மையைச் சுதந்தரிக்கச் செய்து ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

உங்களுக்காக ஜெபிக்கும்,
அருள்திரு. ஆல்வின் பிரைட்.
உதவி போதகர்.

# உதவி ஆயரம்மா மடல்

இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள்.

## சிந்திக்க ஒரு சிறுகதை

மணி மற்றும் மேரிக்கு டெனி மற்றும் டெரி என்ற இரண்டு பிள்ளைகள் இருந்தனர். மணி Etisalat-ல் வேலை செய்துவந்தார். மேரி வீட்டைக் கவனித்து வந்தார். அழகான apartment-ல் குதூகலமாக வாழ்ந்து வந்தார்கள். தேவபக்தி நிறைந்த குடும்பமாக, அநேகருக்குப் பிரயோஜனமாக வாழ்ந்தார்கள். டாடி வீட்டிற்கு வந்தவுடன், அவர்கள் apartment-க்கு அருகில் உள்ள பூங்காவிற்குக் குடும்பமாகச் சென்று உலாவி வருவார்கள். சில வேளைகளில், டாடிக்கும் பிள்ளைகளுக்கும் ஒருமித்த விடுமுறை வரும் நாட்களில் பீச்சுக்குச் செல்வார்கள். மேரி காலையிலேயே சாப்பாட்டை சமைத்துவிட்டு, அதை பீச்சிற்கு எடுத்துச்சென்று சந்தோஷமாய் swim பண்ணிவிட்டு வரும் டெனிக்கும், டெரிக்கும் கொடுப்பாள். Corniche-ல் நடை பயிற்சியும் மேற்கொள்வார்கள்.

பிள்ளைகள் வீட்டு வேலைகளை முடித்து பாடங்களைப் படிப்பார்கள். குடும்ப ஜெபத்திற்குப்பின் தூங்கச் செல்வார்கள். அவர்கள் வீட்டின் front door-ல் "Don't leave home without prayer" என்கிற stickerl ஒட்டி வைத்திருந்தார்கள். அதன்படியே வாழ்ந்தார்கள். இப்படி அவர்களின் குடும்பம் ஒரு குட்டி பரலோகம் போல் இருந்தது.

டெனி 6th grade-ம், டெரி 4th grade-ம் படித்து வந்தார்கள். ஒருநாள் டாடி, முன்பின் தெரியாத ஒரு விருந்தாளியை அழைத்து வந்து, அவர் அவர்களோடேயே தங்கப்போவதாகக் கூறினார். எல்லாரும் சற்றுத் தயங்கினாலும் சீக்கிரம் யாவருக்கும் அவரைப் பிடித்துப் போயிற்று. அவரது பேச்சு சுவாரஸ்யமாயிருந்தது. அவரது நகைச்சுவை அனைவரையும் விழுந்து விழுந்து சிரிக்கச் செய்தது. அவரது பாடல்கள் மனதை ஈர்ப்பதாகவும், அவர் சொல்லிய கதைகள் உள்ளத்தை நெருடுவதாகவும் இருந்தன. அவரது பாடல்கள் டெனியையும், டெரியையும் குத்தாட்டம் போடவைத்தது. முதலாவது அவ்வப்போதுதான் பேசினார். வரவர பிள்ளைகள் அவரை அதிகமாய் நேசித்ததால் வேதம் வாசிக்காமலும், ஏன் ஜெபிக்காமலும் கூட சாப்பிட்வுடனே அவரோடே போய் ஒட்டிக்கொண்டனர். சாயங்காலம் பூங்காவிற்குப் போவதை நிறுத்தி முழுக்குடும்பமும், அவரோடு நேரம் செலவழித்தனர்.

சிலவேளை அவர் இரவு வெகுநேரம் பேசிக்கொண்டிருப்பதால் குடும்ப ஜெபத்திற்கும் நேரமில்லாமல் போகும். அம்மாவிற்கு இது பிடிக்கவில்லை. பிள்ளைகள் தட்டில் சாப்பாடு போட்டுக்கொண்டு அவரோடு உட்கார்ந்து சாப்பிடத் துவங்கியபோதுதான், அப்பா, நிலைமை எல்லையை மீறுகிறது என்று உணர ஆரம்பித்தார். இன்னொரு கவலைக்குரிய காரியம், பிள்ளைகள் Junior Church-ல் கற்றுக்கொடுத்த பாடல்களை மறந்து, இவர் சொல்லிக்கொடுத்த பாடல்களைப் பாடத் துவங்கியதுதான்.

விருந்தாளி குடும்பத்தின் நேரத்தையெல்லாம் எடுத்துக்கொண்டிருந்தார். அவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக்கூட நேரமில்லாமல் போயிற்று. பிள்ளைகள் படிப்பில் பின்வாங்கத் துவங்கினர். வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதும், ஜெபிக்காமலே வெளியே செல்லுமளவிற்கு, நேரத்தை விருந்தாளிக்குக் கொடுத்துவிட்டு, ஏதோ கடுமையான வேலை வீட்டில் இருப்பதுபோல் கடைசி நேரத்தில் கடகடவென வெளியே புறப்படுவார்கள் பிள்ளைகள்.

இறுதியில் டாடி, அவரை ஒரு அறைக்குள் வலுக்கட்டாயமாகத் தள்ளினார். தேவைப்பட்ட நேரம் மட்டும் அவரைக் கூப்பிட்டனர். குடும்பம் பழைய தேவபக்தியுள்ள நிலைக்குச் சீரானது. இந்த விருந்தாளி யார் என்று கண்டுபிடித்தீர்களா? இவர் வேறு யாருமல்ல, திருவாளர் TVதான். Lulu-வில் offer போட்டிருந்தபோது, அவர்கள் டாடி ஆசைப்பட்டு வாங்கி வந்த "Sony 4K 49"inch TV" தான் அது. TV முன்பாகவோ, Computer முன்பாகவோ அதிக நேரம் செலவழிக்காதீர்கள். அது உங்கள் உடலுக்கோ, ஆத்துமாவுக்கோ நல்லதல்ல.

**வேதவாசிப்புப் பகுதி :** பிரசங்கி 3:1-8
**மனப்பாட வசனம் :** எபேசியர் 5:16

உங்களுக்காக ஜெபிக்கும்
திருமதி.ஜெனிஃபர் ஆல்வின்
உதவி ஆயரம்மா.

## HARVEST FESTIVAL 2017

### WEEKLY FOOD SALES

| Date | Sponsoring group |
|---|---|
| 03-11-2017 | Junior Church |
| 10-11-2017 | Satwa - Jebal Ali Prayercell |
| 17-11-2017 | **Harvest Festival - Dubai** |



தம்முடைய ஒரேபேரான குமாரனை மனுக்குலத்துக்கு ஈவாகத்தந்து கிறிஸ்துவின் ஈகையை நமக்குக் கற்றுக்கொடுத்த நம் ஐஸ்வர்யத்தின் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

கடந்த அக்டோபர் மாதம் 6ஆம் தேதி, நம் முதியோர்களை எவ்வண்ணமாக நாம் ஆதரித்து மரியாதை செலுத்த வேண்டும் என்பதையும், நம் சிறார்கள் மூப்பர்களை எவ்வண்ணமாக மதித்து நடக்க வேண்டும் என்பதையும் ஆயர் மூலமாகக் கற்றுக்கொண்டு, தேவன் நம் மூத்த குடிமக்கள் தினத்தைக் கொண்டாட கிருபை செய்தார். கடந்த மாதம் இரண்டாம் வாரத்தில் நமது திருச்சபையின் வாலிபர்கள் சாட்சி கலந்த பாடலோடு மிகச் சிறப்பாக ஆராதனையை நடத்தி நம்மை பிரமிக்க வைத்தார்கள். அந்த வார ஆராதனையில் அலைன் திருச்சபைப் போதகர் Rev.Christopher Rajendran அவர்கள் தேவ செய்தி தந்து நம்மைக் கிறிஸ்துவின் சுவிசேஷ செய்திக்குள்ளாக வழிநடத்தினார்கள். அவர்கள் தமது திருச்சபையின் அறுப்பின் பண்டிகையை முன்னிட்டு நமக்கு சிறப்பு அழைப்பு விடுத்துச் சென்றார்கள்.

துபாய் Chaplaincy மூலமாக அலைனில் நடைபெற்ற சிறப்பு வாலிபர் முகாமை பொறுப்பேற்றுச் சென்ற திரு. ஜீலியன் அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து சென்ற நம் திருச்சபையின் அனைத்து வாலிபப் பிள்ளைகளுக்கும் திருச்சபையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அக்டோபர் மாதம் 27ஆம் தேதியன்று, நாம் திருச்சபையாகத் தாங்கிவரும் விஷ்வவாணி ஊழியத்தின் சார்பாக, அதன் ஜெப ஒருங்கிணைப்பு இயக்குநர் Rev. இம்மானுவேல் அவர்கள் நமது ஆராதனையில் கலந்து கொண்டு சிறப்புச் செய்தி கொடுத்து சபைச் சீர்திருத்தத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்கள். அவர்களுக்குத் திருச்சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அக்டோபர் மாதம் 27ஆம் தேதியன்று மாலை நமது கிளைச்சபையான இராஸ் அல் கைமா திருச்சபையின் அறுப்பின் பண்டிகை மிகச்சிறப்பாக நடைபெற்றதற்காகக் கர்த்தரைத் துதிக்கிறேன். அதற்காக உழைத்த, Mr.Y.Edwin Nayagam அவர்களுக்கும், இன்னும் பலவிதங்களில் அவர்களுடன் உதவி செய்த யாவருக்கும், கொடுத்த, ஜெபித்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

நமது திருச்சபையின் குடும்ப விழாவாகிய அறுப்பின் பண்டிகையை நாம் நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இதற்காக மிகவும் ஜெபித்து உழைக்கும் அனைத்து அங்கத்தினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சபையார் அனைவரும் தங்கள் உழைப்பின் ஆசீர்வாதத்திலிருந்து தேவனுக்காக உதாரத்துவமாகக் காணிக்கை கொடுக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமக்கு ஜீவன், சுகம், பெலன் மற்றும் பரிசுத்த ஐக்கியத்தைத் தந்த தேவாதி தேவனுக்கு நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து தசம பாகத்துடன் நன்றி செலுத்துவோமாக. திருச்சபையார் தங்களது பாரம்பரிய உணவு மற்றும் உபயோகப் பொருட்களைப் படைத்து இவ்விழாவை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு இவ்விழாவை நடத்த இடம் தந்து உதவிய இந்தியன் உயர்நிலைப் பள்ளியின் நிர்வாகத்திற்கும், அதற்கு உறுதுணையாக இருந்த திரு. டேவிட் தாமஸ் அலெக்ஸாண்டர் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

வருகின்ற நவம்பர் மாதம் உங்களுக்கு மிகவும் ஆசீர்வாதமாக இருக்க நமது தேவாதி தேவனை வேண்டுகிறேன். நீங்களும் நமது திருச்சபைக்காகவும், திருச்சபையின் அனைத்து ஊழியங்களுக்காகவும் விசேஷமாக அறுப்பின் பண்டிகைக்காகவும், வருடாந்தர எழுச்சி மாநாட்டிற்காகவும் (Convention) உங்கள் தனி மற்றும் குடும்ப ஜெபங்களில் ஜெபிக்குமாறு மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

Jernaus Britto, Secretary.

## NEW PARSONAGE

Near Al Garhoud-Choithram Super Market

Behind “Le Meridian Hotel”

Street No : 47, Villa No 6A

Tel.Res.: 04 2552065, Mob: 050 5533645,

Tel.Off.: 04 2249249. Email: tamilcsi@eim.ae

# நிறைவேறிய தீர்க்கதரிசனம்

கலிலேய நாசரேத்தில் கலியாண நிச்சயத்தில்
கன்னிமரி பொன்கனவில் தன்னந்தனி தன்வீட்டில்
வலுவிலே வானதூதன் காபிரியேல் வாழ்த்துகையில்
கன்னிமகள் கசங்கிப்போய் சின்னதொரு மவுனத்தில்

மரியாளே பயப்படாதே பெரியகிருபை உயர்த்தப்பட்டாய்
தேவலோகில் தேர்ந்தெடுத்து பூலோகிலும் புனிதையானாய்
பரிசுத்தப் பாலகனை பரவசத்தில் பெற்றெடுப்பாய்
பெரியவராம் தெய்வமகன் இயேசுவெனப் பெயரிடுவாய்

மலடியென்று பட்டம்பெற்ற எலிசபெத்தும் கர்ப்பந்தரித்தாள்
தேவனாலே கூடாதது எதுவுமில்லை என்றுணர்ந்தாள்
கலங்கிநின்ற மரியாளுக்கும் புலப்பட்டது உள்உண்மைகள்
தேவனுக்கே நான்அடிமை திடங்கொண்டாள் அடிபணிந்தாள்

யோசனையோடே ஊசலாடி யோசேப்புள் போராடினான்
யோசேப்பின் சொப்பனத்தில் பேசிவிட்டான் வானதூதன்
யோசனையில் திருப்திகண்டான் யோசேப்பு பாசம்வைத்தான்
பரிசுத்தம் போற்றஎண்ணி இறுதிவரை உறுதிகொண்டான்

நீக்கலாமா நினைத்தவனும் கேக்காமலே சேத்துக்கொண்டான்
நிம்மதியை வாழ்க்கைக்குத் தம்மதியாய் ஆக்கிக்கொண்டான்
தாக்கமெலாம் தாங்கிக்கோண்டு தாய்தந்தையாய்ப்
பாத்துக்கொண்டான்
தேவகிருபை யூதமரபில் வேரோடி இருந்துகொண்டான்

முன்னுரையை நிறைவேற்ற பின்முறையாய் வானதூதுவன்
கண்அடைத்து உள்ளந்திறந்து யோசேப்புள் சொப்பனித்தான்
முன்பின்முரண் வந்திடாமல் தன்னிறைவுத் தடம்போட்டான்
வானவரின் வரைவுப்படி பூஉலகோரை மகிழ்வித்தான்

கலங்கியது யூதேயா துலங்கியது தீர்க்கதரிசனம்
காத்திருந்த ஏசாயா பாத்திருந்த தேவதரிசனம்
நிலைகுலைந்த தாவீதுசுற்றம் தலைமலைத்த பகைவளையம்
நலஅடையாளம் ஞானதீர்க்கன் மூலம்நீண்ட தேவகரம்

கன்னிவயிற்றில் தன்னிகரில்லா சின்னக்குமரன் கருஉருவாகும்
கண்ணுமகனை இம்மானுவேல் என்றுஅழைக்கும் அன்புமனம்
உன்னதத்தின் அடையாளம் மண்ணகத்தின் துயர்துடைக்கும்
தாய்மடியில் நோய்நொடிக்கு உய்யும்சேய் ரட்சகராம்

ஈராயிரம் ஆண்டுகள்முன் நிறைவேறிய தீர்க்கதரிசனம்
ஈராயிரத்து எழுநூறு ஆண்டுகள்முன் கொண்டநிச்சயம்
வேரோடே தீமைகளைக் கூறுபோடும் சுபதினம்
வருகிறது உலகெலாம் தருகிறது அன்புமயம்.

ஆதாரம் : லூக்கா 1:8-38, மத்தேயு 1:18-25, ஏசாயா 7:1-15.
கவிதை எண் : 202.
ஆக்கம் : மணிமுத்து.

## வருந்துகிறோம்

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Shanthi Silas அவர்களின் தாயார்
Mrs.Susila Lysander அவர்கள் 05-10-2017 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mr.Jothi Basu அவர்களின் தாயார்
Mrs.Pappathi அவர்கள் 06-10-2017 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Pauline Samuel அவர்களின் தகப்பனார்
Mr.Jebadhas அவர்கள் 25-10-2017 அன்றும்

நமது சபையைச் சேர்ந்த
Mrs.Jone Sylvia David அவர்களின் தாயார்
Mrs.Hebzibah George Manickam அவர்கள் 26-10-2017
அன்றும் கர்த்தருக்குள் நித்திரை அடைந்துள்ளார்கள்.

# தென்னிந்தியத் திருச்சபை
# தமிழ் சபை - துபாய்

## ஸ்தோத்திரப் பண்டிகை 2017

"என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டகசாலையிலே கொண்டுவாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற் போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்க மாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." மல்கியா 3:10

நாள் : வெள்ளிக்கிழமை 17-11-2017

இடம் : **INDIAN HIGH SCHOOL**

நேரம் : காலை 7.00 மணி முதல் நண்பகல் 1.30 மணி வரை

## நிகழ்வு முறைமை

| | | |
|---|---|---|
| காலை | 07.00 மணி | : ஸ்தோத்திரப் பண்டிகை ஆராதனை |
| காலை | 08.30 மணி | : ஸ்டால்கள் திறப்பு விழா, விற்பனை |
| காலை | 10.00 மணி | : ஏல விற்பனை |
| நண்பகல் | 01.30 மணி | : ஸ்தோத்திரப் பண்டிகை நிறைவு ஜெபம்,ஆசீர்வாதம் |

உணவு ஸ்டால்கள்: காலை சிற்றுண்டி, இனிப்பு, காரங்கள், காப்பி, தேனீர், குளிர்பான ஸ்டால்கள், பிரியாணி மற்றும் இதர ஸ்டால்கள்.

ஊக்கமாய் ஜெபியுங்கள்!
மனப்பூர்வமாய் காணிக்கை கொடுங்கள்!!
உற்சாகமாய் பங்கு பெறுங்கள்!!!

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

## யாக்கோபு

ஹாமார் (ஏமார்) என்ற சீகேமின் தகப்பன் யாக்கோபிடம் வந்து தன்னுடைய மகனின் காரியத்திற்காகப் பேசுவதற்குப் புறப்பட்டு யாக்கோபிடம் வருவதற்கு முன்பாக, வயல்வெளியில் மந்தையை மேய்க்கச் சென்றிருந்த யாக்கோபின் குமாரர், நடந்தவைகளைக் கேள்விப்பட்டு, மிகுந்த துக்கத்தினாலும், கோபத்தினாலும் தங்கள் தகப்பனாரிடமாக திரும்பி வந்தனர். அவர்கள் வந்து, தங்கள் தகப்பனாரை நோக்கி, மெய்யாகவே, இந்த மனிதனும் அவனுடைய நகரத்தாரும் கொல்லப்பட வேண்டும். ஏனெனில் தேவனாகிய கர்த்தர் நோவாவிடமும், அவரது குமாரரிடமும், மனுஷர் திருடக்கூடாது எனவும், விபச்சாரம் செய்யக்கூடாதெனவும் கூறியிருக்கிறாரே! சீகேமோவென்றால் இவ்விரண்டையும் நமது சகோதரியினிமித்தம் செய்திருக்கிறான். இதற்கு அவனும், இந்நகரத்தாரும், அவர் தகப்பனும், கொல்லப்பட, நியாயந்தீர்க்க வேண்டும் என்றார்கள்.

இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் ஹாமார் யாக்கோபிடம் வந்து, யாக்கோபின் முன்பாகவும் அவரது குமாரர் முன்பாகவும் தீனாளிநிமித்தம் பேசுவதற்கதாக வந்து சேர்ந்தார். ஹாமார் யாக்கோபை நோக்கி, என்னுடைய மகனின் ஆன்மா, உங்கள் குமாரத்திக்காக ஏங்குகின்றது. ஆகவே அவளை அவனுக்கு மனைவியாகக் கொடுத்து, எங்களோடே சம்பந்தம் கலவும். எங்களுக்கு உங்கள் குமாரத்திகளைக் கொடும். நாங்களும் எங்களது குமாரத்திகளை உங்களுக்குக் கொடுக்கிறோம். அப்படியே நாம் ஒருமித்து ஒரே ஜனமாக இவ்விடத்திலே வசிப்போம். இந்த இடம் பரந்து விரிந்து கிடக்கிறது. இதிலே நீங்கள் வியாபாரம் செய்து, உங்களுக்கு இஷ்டமானதை நடப்பியுங்கள். உங்களை ஒருவரும் ஒன்றும் கேட்கமாட்டார்கள் என்றார். அப்பொழுது சீகேமும், அங்கே வந்து, யாக்கோபிடமும், அவரது குமாரரிடமும் உங்கள் குமாரத்தியை எனக்குக் கொடுப்பதற்கு தங்களுடைய கண்களில் எனக்கு தயவு கிடைப்பதாக. அதற்காக நீங்கள் என்ன கூறினாலும் செய்கிறேன். ஆனால் அவளை மட்டும் மனைவியாக தாருங்கள் என்றான்.

சிமியோனும் லேவியும் ஹாமாருக்கும் சீகேமுக்கும் பிரதியுத்திரமாக, நீங்கள் சொல்லிய எல்லாவற்றையும் நாங்கள் செய்வோம். எங்கள் சகோதரியோவெனில் உங்களுடைய வீட்டிலிருக்கிறாள். எங்கள் தகப்பனாகிய ஈசாக்கினிடம் ஆட்களை அனுப்பி, அவரது அபிப்பிராயத்தைக் கேளாமல் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது. அவர் எங்கள் தகப்பனாகிய ஆபிரகாமின் வழிகளை நன்கறிவார்.

அவர் எங்களிடம் உரைப்பதெல்லாவற்றையும், ஒன்றையும் மறைக்காமல் உங்களுக்கு அறிவிக்கும் வரையில், அவளைத் தூரமாக வைத்துக் கொள்ளுங்கள். சிமியோனும், லேவியும் உரைத்த வார்த்தைகள் சீகேமுக்கும் ஹாமாருக்கும் நலமாகத் தோன்றியபடியால் அவர்கள் தங்களது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டார்கள்.

அவ்விருவரும் சென்றவுடன் யாக்கோபின் குமாரர் யாக்கோபிடம் “இவர்களைப் போன்ற துன்மார்க்கராலேயே இவர்களுக்கும் இவர்களது நகரத்தாருக்கும் இழப்பு நேரிடுகிறது. இவர்களைத் தண்டிப்பது எப்படி” என்று யோசிக்கத் தொடங்கினார்கள். அப்பொழுது சிமியோன், அவர்களிடம், “இதோ ஒரு சரியான யோசனை. அவர்களிலுள்ள ஆண்மக்கள் அனைவரையும் விருத்தசேதனம் செய்யும்படி சொல்வோம். ஏனெனில் நாம் அனைவரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள். அவர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லையென்றால் நமது சகோதரியை அங்கிருந்து அழைத்து வந்துவிடுவோம். சம்மதித்து விருத்தசேதனம் பண்ணினால், அவர்கள் நோவில் இருக்கும் போது நாம் அவர்களை பட்டயத்தால் சங்கரிப்போம்” என்றார். இவரது யோசனை அனைவருக்கும் நன்றாக காணப்பட்டது. ஆகவே அனைவரும் இதற்கு ஒத்துக்கொண்டனர்.

தொடரும்....

நன்றி: யாசேரின் புத்தகம்

தொகுப்பு & தமிழாக்கம்: ஷீபா ரெஜினால்ட்

## திருமறைப் பாட ஒழுங்குகள் - நவம்பர் 2017

| நாள் | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்தி பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 03-11-2017 | கர்த்தருக்குக் கீழ்ப்படிதல் | உபாகமம் 28:1-14 | கொலோ. 2:16-23 | மத்தேயு 22:1-14 | 8 |
| 10-11-2017 | கர்த்தருக்குக் கொடுத்தல் | உபாகமம் 16:9-17 | 2 கொரிந். 8:9-15 | மத்தேயு 6:1-4 | 116:12-19 |
| 17-11-2017 அறுப்பின் தோத்திரப்பண்டிகை | கர்த்தருக்கு நன்றி செலுத்துதல் | உபாகமம் 26:1-15 | 2 கொரிந். 9:6-15 | லூக்கா 19:11-26 | 100 |
| 24-11-2017 வருகை ஆயத்தம் | ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தம் | ஒசியா 10:12-15 | கொலோ. 4:1-6 | லூக்கா 12:35-40 | 37:1-24 |

# திருச்சபை ஜெபநாள் 05-11-2017 (முதல் ஞாயிறு)

"கர்த்தாவே, ... உமது உண்மையின்படியும், உமது நீதியின்படியும் எனக்கு உத்தரவு அருளிச்செய்யும்." சங்கீதம் 143:1

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, "திருச்சபை ஜெபநாளில்" பங்கு பெற்றுத் தொடர்ந்து ஜெபித்துவரும் ஒவ்வொரு குடும்ப அங்கத்தினர்களுக்கும், சபையின் சார்பில் நன்றி கூறுகின்றோம். தொடர்ந்து மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஜெபக் குழுக்களிலும், மற்றும் தினந்தோறும் ஜெப நேரம் ஒதுக்கி, ஜெபித்துத் திருச்சபைத் திருப்பணிகளைத் தாங்குங்கள். தேவ ஆசீர்வாதம் உங்களோடிருப்பதாக.

## துதிகள்

- கர்த்தர் நமக்குத் தந்தருளிய சரீர சுகம், பெலம், ஜீவனுக்காக, திருச்சபை மூலமாக நாம் இம்மட்டும் பெற்றுக்கொண்ட ஐக்கியம் மற்றும் ஆன்மீக நன்மைகளுக்காக நன்றி கூறுவோம்.
- தேவன் நம் ஜெபத்தைக் கேட்டு நம் மத்தியில் பிரசன்னராயிருந்து, நம்மைத் தாங்கி பெலப்படுத்தியமைக்காக ஸ்தோத்திரம் கூறவோம்.
- Medical camp, Youth Fellowship Special Service, இராஸ் அல் கைமா கிளைச்சபையின் ஸ்தோத்திரப்பண்டிகை ஆராதனை யாவும் சிறப்பாக நடந்தேற கர்த்தர் பாராட்டின கிருபைகளுக்காக அவரைத் துதிப்போம்.

## திருச்சபை திருப்பணிகளுக்கான ஜெப வேண்டுதல்கள்

- நம் குருவானவர்கள், சபை ஊழியர், மற்றும் அவர்களுடைய குடும்பத்தினருக்காக, திருப்பணிகளுக்காக,
- நம் திருச்சபையின் முன்னாள் குருவானவர்கள், அவர்கள் குடும்பத்தாருக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும்,
- நம் திருச்சபைகளைச் சேர்ந்த திருச்சபையினர் அனைவருக்காகவும், ஆங்காங்கே நடைபெறும் ஆராதனைகள், ஊழியங்கள், சிறுவர், வாலிபர், ஆண்கள், பெண்கள் மத்தியில் நடைபெறும் சிறப்பு ஊழியங்கள் மற்றும் முகாம் ஊழியங்களுக்காக,
- திருச்சபை மக்களுடைய நல்லுறவு பெலப்பட ஏதுவான நம் ஆன்மீக வளர்ச்சிக்காக,
- திருச்சபையின் நிர்வாகக்குழு அங்கத்தினர்களுக்காகவும், தேவ சித்தம் நிறைவேற்றும் வகையில் அவர் தம் பணிகளுக்காகவும்,
- திருச்சபைப் பணிகளை ஜெபத்தோடு உற்சாகமாகவும், உதாரத்துவமாகவும் தாங்கி வரும் திருச்சபை மக்களுக்காக,
- சிறுவர் வேதபாடசாலைத் திருப்பணிகளில் அர்ப்பணிப்போடு பங்கு பெறும் தேவபிள்ளைகளுக்காக, பயன்பெறும் நம் குழந்தைகளின் இறைபக்திக்காக,
- நமது திருச்சபையின் ஜெபக்குழுக்களுக்காக, ஐக்கிய, ஆன்மீக வளர்ச்சிக்காக, மிஷனரி ஊழியங்களுக்காக, தாங்கும் திருச்சபை மக்களுக்காக, மற்றும் மிஷனரி ஸ்தாபனங்களுக்காக
- தென்னிந்தியத் திருச்சபைக்காக, அனைத்துப் பேராயங்கள், நமது பேராயர்கள், குருவானவர்கள், திருப்பணியாளர் அனைவருக்காகவும், திருப்பணிகளுக்காக

- கொளகூர் மாதிரி கிராமத்தில் அமைத்துள்ள மருத்துவமனை ஊழியங்களுக்காக ஜெபிப்போம்.

## நாட்டுக்காக ஜெப வேண்டுதல்கள்

- இந்திய நாட்டுக்காக, நாட்டின் தலைவர்கள் மற்றும் அதிகாரம் வகிப்போர் அனைவருக்காகவும், தேசத்தின் வளத்துக்காகவும், வளர்ச்சிக்காகவும், மனிதநேயமும், மத நல்லிணக்கமும் பெருகவும் ஜெபிப்போம். நல்ல இயற்கைச் சூழ்நிலைகள், மழை வளத்துக்காக ஜெபிப்போம்.
- அரபு ஐக்கியக் குடியரசுக்காக, அதன் தலைவர்களுக்காக, இங்கு வாழும் அனைத்துமக்களின் சமாதானத்துக்காக,
- உலகத் தலைவர்களுக்காக, சமாதானத்துக்காக, உலகில் தேவ ஆளுகைக்காக

## நமது ஜெப மன்றாட்டுகள்

- இந்த மாதத்தில் தேவ வழிநடத்துதல்கள், தேவ ஆசீர்வாதங்களுக்காக, பாதுகாப்பு, பராமரிப்பு, சுகம், பெலம் ஆகிய தேவ கிருபைக்காக,
- நமது குடும்பங்களின் தேவைகளுக்காக, நமது பிள்ளைகளின் கல்விமுன்னேற்றம், மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக, வளமிகு எதிர் காலத்துக்காக,
- வேலை வாய்ப்புக்காய் காத்திருப்போருக்காக, விசா பிரச்சனைகளில் இருப்போருக்காக, சரீர சுகவீனங்களில் சிகிச்சை பெறுவோருக்காக,
